சார்பு நீதிமன்றம், இலால்குடி

**முன்னிலை:- திருமதி. A.கீதா, M.L.,**

சார்பு நீதிபதி, லால்குடி.

2019ம் ஆண்டு ஏப்ரல் 20ம் நாள் சனிக் கிழமை

**அசல் வழக்கு எண்.678.2018**

1. பன்னீா் செல்வம்
2. துரைராஜ்
3. செல்வம்
4. கண்ணகி
5. மொழினா
6. மைனர் யுவராஜ்-க்காக அவரது பாதுகாவராக
   அவரது தாய் மொழினா ... வாதிகள்

/ எதிராக /

1. மாணிக்கம்
2. ராஜசேகரன் .... பிரதிவாதிகள்

இம்மனு 15/04/2019ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராமமூர்த்தி அவா்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.P.செந்தில்குமாா், அவா்கள் முன்னிலையாகி, பின்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் அழைத்து முன்னிலையாகாததாலும் ஒருதலைபட்சமாக தீா்மானிக்கப்பட்டு, பின்பு வாதிகள் தரப்பில் எடுத்துரைத்த வாதங்கள் மற்றும் வழக்கின் ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

1. பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. .

**2. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம் -**

தாவா சொத்து 1 முதல் 4 வாதிகள், 5ம்பிரதிவாதியின் கணவர் ஆறுமுகம் மற்றும் 1ம்பிரதிவாதியின் பெற்றோரான சிவபாக்கியம் அம்மாளுக்கும், கோவிந்தசாமி ஆசாரிக்கும் சொந்தமானதாகும். சிவபாக்கியம் 2006ம் வருடம் இறந்துவிட்டார் 2004ம்

வருடத்திலிருந்து கோவிந்தசாமி ஆசாரி பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரும் 2015ம் வருடம் இறந்துவிட்டார். தாவா சொத்துக்களில் ஏ ஷெட்யூல் சொத்தில் 1ம்பிரதிவாதியும் 1ம்வாதி பி ஷெட்யூல் சொத்திலும் தற்காலிக ஏற்பாட்டில் 2004ம் வருடத்திலிருந்து குடியிருந்து வந்துள்ளனர். தற்போது சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளும் எண்ணத்துடன் வாதிகள் 1ம்பிரதிவாதியை அணுகியபோது ஏ ஷெட்யூல் சொத்தை பாகம்பிரிக்க முடியாது என்றும், அந்த சொத்தை தனது மகனான 2ம்பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் பாத்தியப்படுத்திவிட்டதாகவும், பி ஷெட்யூல் சொத்தை கிரையம் செய்து அதனை கோவிந்தசாமியின் அனைத்து வாரிசுகளும் சமமாக பிரித்துக்கொள்ளலாம் என்று கூறிவிட்டார். அவ்வாறு 2ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்த 1ம்பிரதிவாதிக்கு உரிமையில்லை. எனவே தாவா சொத்துக்களை ஆறு பாகங்களாக பிரித்து அதில் ஐந்து பாகங்களை வாதிகளுக்கு ஒதுக்கும்படி கோரி இந்த வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் அழைத்து முன்னிலையாததாலும் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டது.

**4.** வாதி தரப்பில் 1ம்வாதியான பன்னீர்செல்வம் என்பவர் வா.சா.1 ஆகவும், 5ம்வாதியான மொழினா என்பவர் வா.சா.2ஆகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். வாதி தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**5.** இந்த வழக்கில் முடிவு செய்ய வேண்டிய பிரச்சனை யாதெனில் வாதி கோரியவாறு தாவா சொத்தில் வாதிகளுக்கு 5/6 பங்கினை பொருத்து பாகப்பரிகாரத்திற்கு முதல்நிலை தீர்ப்பாணை வழங்கத்தக்கதா என்பதேயாகும்.

**6.** தாவா சொத்துக்கள் இறந்துபோன கோவிந்தசாமி என்பவரால் அவருடைய பெயரிலும் அவருடைய மனைவி சிவபாக்கியம் என்பவர் பெயரிலும் கிரையம் பெறப்பட்டுள்ளன என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வாதி தரப்பு சான்றவாணங்கள் 5 மற்றும் 6 ஆகியவற்றிலிருந்து தெரியவருகிறது. அந்த சொத்துக்களை பொறுத்து சிவபாக்கியமோ அல்லது கோவிந்தசாமியோ எந்த ஆவணங்களும் எழுதி வைக்கவில்லை என்றும், வாதி தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தாவா ஏ பட்டியல் சொத்தை 1ம்பிரதிவாதி தன் மகனான 2ம்பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், அந்த ஆவணத்தில் 7.9.2005 தேதியில் கோவிந்தசாமியும் சிவபாக்கியமும் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்ததாகவும் அதன்படி தாவா ஏ பட்டியல் சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்றும், 1ம்பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார் என்றும், அவ்வாறு அவர் குறிப்பிடுவது போல கோவிந்தசாமியும், சிவபாக்கியத்தம்மாளும் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றும் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சம்மனை பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜரான பிரதிவாதிகள் வாதிகள் தரப்பில் சொல்லப்படும் சங்கதிகளை ஆட்சேபித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அவர்கள் மீது ஒருதலைபட்ச உத்தரவும் இந்த வழக்கில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வாதிகள் வழக்குரையிலும் சாட்சியத்திலும் கூறியுள்ள வகையிலும் வாதிகள் தரப்பு ஆவணங்களை பரிசீலித்த வகையிலும் வாதிகளுக்கும் 1ம்பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்பதும் வாதிகளுக்கு 5/6 பங்கு பாகமும் 1ம்பிரதிவாதிக்கு 1/6 பாகமும் உரிமையுள்ளது என்பதும் தெரியவருகிறது. எனவே வாதிகள் கோரியுள்ளவாறு தாவா சொத்துக்களில் 5/6 பங்கினை பொறுத்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணை

வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீமானம் செய்கிறது. அதன்படி 1ம்பிரதிவாதி 2ம்பிரதிவாதி பெயருக்கு எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே வாதிகள் கோரியவாறு தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு உரிய 5/6 பாகத்தை பொறுத்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும் 1ம்பிரதிவாதியால் 2ம்பிரதிவாதிக்கு எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என ஒரு விளம்புகை பரிகாரமும் செலவுத் தொகையுடன் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் என் முன்பாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர், என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 20-04-2019 ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
இலால்குடி.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்:-</u>

வா.சா.1 திரு.பன்னீர் செல்வம்
வா.சா.2. திருமதி. மொழினா

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | வம்சாவழி வரைபடம் |
| வா.சா.ஆ.2 | 27.09.2015 | கோவிந்தசாமி இறப்பு சான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.3 | 14.12.2006 | சிவபாக்கியம் இறப்பு சான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.4 | 06.06.2015 | ஆறுமுகம் இறப்பு சான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.5 | 19.09.1979 | சிவபாக்கியம் பெயரில் ஏற்பட்ட ஏ சொத்தின் கிரையப் பத்திரம் நகல் |
| வா.சா.ஆ.6 | 22.11.1989 | கோவிந்தசாமி பெயரில் ஏற்பட்ட பி சொத்தின் கிரையப் பத்திரம் நகல் |
| வா.சா.ஆ.7 | 30.01.2018 | 1ம்பிரதிவாதி ஏ சொத்தை 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை :-</u>

சார்பு நீதிபதி,
இலால்குடி.